## About Our Institution

The SMVEC- Centre of Legal Education is one of the initiatives of Sri Manakula Vinayagar Engineering College Puducherry. It is approved by the Bar Council of India (BCI) and also by the Pondicherry University. It is the best private Law school established in Puducherry to pioneer Legal education reforms. The Centre of Legal Education at present offers four under graduate programmes. i.e. B.A.LL.B., B.Sc. LL.B., B.B.A LL.B., LL.B.

The vision of SMVEC- Centre of Legal education is to get globally recognized for excellence in quality education, innovation and research for the transformations of lives to serve the society. The programmes of Centre of Legal Education aim to provide students with a comprehensive and interdisciplinary legal education. The programmes are to promote legal and ethical values and uphold the Rule of Law and the Constitution of India. The institution is provided with an environment that offers high-quality education through active learning methods, qualified and experienced faculty and exposure through legal internships. The course curriculum is designed perfectly in par with national standards of Legal Education. The college also provides the internship facilities for the students as a part of curriculum.

SMVEC- Centre of Legal education with an objective to raise the standards of Clinical Legal Education in India regularly hosting Seminars, moot court competitions, and encourages law students to participate in various events and competitions across the Nation. Numerous outreach programs are being conducted as a social initiative that helps the students to understand the implications of the legal measures.

**Other Institutions Under Our Management**

1. Sri Manakula Vinayagar Engineering College
2. Sri Manakula Vinayagar Medical College
3. Thakshasila University
4. Sri Manakula Vinayagar Polytechnic College
5. Sri Manakula Vinayagar Nursing College
6. Sri Manakula Vinayagar School of Architecture
7. Sri Manakula Vinayagar School of Agriculture
8. Sri Manakula Vinayagar Pharmacy College
9. Sri Manakula Vinayagar College of Physiotherapy
10. Sri Manakula Vinayagar College of Allied Health Science
11. Sri Manakula Vinayagar School of Arts and Science
12. Sri Manakula Vinayagar Institute of Technology
13. Mailem Engineering College
14. Sri Manakula Vinayagar CBSE School.
15. . Venkateshwara college of education.

**<u>வெள்ளிவிழா தேசிய அளவிலான தமிழ் வழக்குவாதப் போட்டி– 2024</u>**

ரம்யா ………மனுதாரர்

எதிர்

இரவி ……… எதிர் மனுதாரர்

வழக்கு எண். / 2024

**<u>வழக்கின் பொருண்மைகள்</u>**

மேற்காசிய தீவுகளில் ஒன்றான, வேதபுரி அதிக மக்கள் தொகை கொண்ட ஒரு நாடாகும். இந்நாட்டில் அதன் மக்களின் மதம், கலாச்சாரம் மற்றும் பண்பாடு போன்ற உரிமைகளைப் பாதுகாப்பதில் அரசமைப்புச் சட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. உலகின் மிக அதிக ஷரத்துக்களைக்கொண்ட அந்நாட்டின் அரசமைப்புச்சட்டம் தன்னுடைய குடிமக்களின் கலாச்சாரம் மற்றும் மத உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இயற்றப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை இந்த நோக்கத்தை மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் வெளிப்படுத்துகிறது. வேதபுரி ஒரு மதச்சார்பற்ற நாடு என்பதால், அனைத்து மத உரிமைகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் பல்வேறு வகையான மத கோட்பாடுகளுக்கு ஏற்ப சட்டங்களை இயற்றியுள்ளது.

சிந்து மதம் உலகின் மிகவும் தொன்மையான ஒரு மதம் என்பதற்கு வேதபுரி நாட்டின் வரலாறு ஒரு சான்றாகும். இதை தொல்லியல் துறையும் உறுதிசெய்துள்ளது. சிந்துக்கள் அவர்களின் புனித நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை கண்டிப்புடன் கடைப்பிடிப்பவர்கள். சிந்து மத விழாக்கள் மற்றும் குடும்ப வாழ்க்கைமுறை, மற்ற மதங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. சிந்துக்களின் மத நம்பிக்கையைப் பாதுகாக்கும் நோக்கத்தில் வேதபுரியின் சட்டக் கட்டமைப்பில் சிந்து திருமணச் சட்டம், 1955, சிந்து வாரிசு சட்டம், 1956 மற்றும் சிந்து தத்தெடுப்புச் சட்டம், 1956 போன்ற பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டு அதன் செயல்பாடுகள் அனைத்தும் இன்றளவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வேதபுரியின் தலைநகரில் வசித்துவரும் தகவல் தொழில்நுட்ப வல்லுநரான ரம்யா அதே பகுதியைச் சார்ந்த இரவி என்ற உயர் போலீஸ் அதிகாரியை, சிந்து மத சடங்குகளைப் பின்பற்றி 5.5.2020 அன்று திருமணம் செய்துகொண்டார். அவர்களது திருமணம் சிந்து திருமணச் சட்டம், 1955–ன் கீழ் 3.8.2020 அன்று பதிவு செய்யப்பட்டது. இவர்களது

திருமணம் ஒரு காதல் திருமணமாகும். திருமணத்திற்கு பின் இருவரும் அதே பகுதியில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் நிறைவான ஒரு திருமண வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். இவர்களின் அடுக்குமாடி குடியிருப்பின் எதிரில் வசிக்கும் அனு என்கிற பெண் பத்திரிக்கையாளர் தனது செய்தி அறிக்கைக்கு பொருத்தமான தரவுகளை சேகரிப்பதில் இரவியின் உதவியை பெற்று வந்தார். அந்த வகையில் அவர்கள் நண்பர்களாக பழகி வந்தனர்.

பணியிடத்தில் இரவு நேரப்பணியை விரும்பி ஏற்றுக்கொண்ட ரம்யாவை அவரது கணவர் இரவி மாலையில் அலுவலகத்தில் விட்டுவிட்டு அதிகாலையில் வீட்டிற்கு திரும்ப அழைத்து வருவதை வழக்கமாக கொண்டிருந்தார். **5.10.2023** அன்று இரவு **9** மணி அளவில் இரவி, ரம்யாவை அவரது அலுவலகத்தில் விட்டுச்சென்றார். ரம்யா தனது வேலையில் முழு கவனத்துடன் செயல்பட்டு கொண்டு இருந்தபோது, தன் கைப்பேசியை வீட்டில் வைத்துவிட்டதை உணர்ந்ததால், தூங்கிக் கொண்டிருக்கும் தன் கணவரை தொந்தரவு செய்ய வேண்டாம் எனக்கருதி, அலுவலகத்தின் சிறப்பு அனுமதியைப் பெற்று ஒரு மகிழுந்து வாகனத்தை முன்பதிவு செய்து தன்னுடைய கைப்பேசியை எடுப்பதற்காக இரவு **11** மணிக்கு வீடு திரும்பினார். வீட்டில் இரவி இல்லாததையும், கதவு வெளியே பூட்டப்பட்டு இருந்ததையும் கண்டார். வாகன ஓட்டுனரின் கைப்பேசியில் இருந்து தனது கணவரை அழைத்தபோது தொடர்பு அணைத்து வைக்கப்பட்டுள்ளது என்று அறிந்ததால் மனக்குழப்பத்தில் அக்கம் பக்கம் பார்த்தபோது தனது கணவரின் காலணி அனுவின் வீட்டின் வெளிபுறத்தில் இருப்பதைக்கண்டார்.

மறுநாள் காலை ரம்யா தனது கணவரிடம் முந்தைய நாள் இரவு எங்கு இருந்தீர்கள் என்று சாதாரணமாக கேட்டார். அதற்கு அவர் தான் வீட்டில் இருந்ததாகவும், இரவு நிம்மதியாக தூங்கியதாகவும் பொய் உரைத்தார். ரம்யா தோழிபோல அனுவின் வீட்டிற்குச்சென்றார். அங்கு அவளுடைய கணவர், குழந்தை மற்றும் தாய் வெளியூர் சென்றிருந்ததால் அனு தனியாகதான் இருப்பதைக் கண்டுபிடித்தார். முந்தைய நாள் இரவு தனது கணவர் ஏன் அனுவின் வீட்டில் தங்கினார் என கேள்வி எழுப்பினாள். அவ்வாறு இரவி தங்கவில்லை என அனு மறுத்தார். இருவரும் குற்றச்சாட்டுகளை மறுத்த நிலையில், மன உளைச்சலுக்கு ஆளான ரம்யா, தன் பெற்றோர் வீட்டில் வந்து தங்கினாள். பின்பு கணவருக்கு எதிராக குடும்பநல நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தொடுத்தார்.

இவ்வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், அதே நீதிமன்றத்தில் திருமண உரிமைகளை மீட்டெடுக்கும் மனுவை இரவி தாக்கல் செய்தார். இந்த மனுவை எதிர்த்த ரம்யா, இந்த கோரிக்கை அரசமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள (ஷரத்து-21) வாழ்வுரிமைக்கு முரணானது என்று கூறி உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தார். இவ்வழக்கானது, உயர்நீதிமன்றத்தில் இரு தரப்பினரின் வாதங்களையும் சமர்ப்பிக்க 16.3.2024 தேதி அன்று பட்டியலிடப்பட்டுள்ளது.

**<u>எழுவினா:-</u>**

சிந்து திருமண சட்டம், 1995–இல் வழங்கப்பட்டுள்ள திருமண உரிமைகளை மீட்டெடுக்கும் உரிமை வேதபுரி அரசமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளதா அல்லது அடிப்படை உரிமையான வாழ் உரிமைக்கு எதிரானதா ?

பங்கேற்பாளர்கள் புதிய எழுவினாக்கள் மற்றும் மேலே கொடுக்கப்பட்டுள்ள எழுவினாக்களுடன் தொடர்புடைய துணை எழுவினாக்களை உருவாக்கி வாதிடலாம்.

**<u>குறிப்பு:-</u>**

1) வேதபுரியின் அரசமைப்புச் சட்டம் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு இணையானது.

2) வேதபுரியின் சிந்து திருமணச் சட்டம், 1955 இந்திய திருமணச் சட்டத்திற்கு இணையானது.

## வெள்ளிவிழா தேசிய அளவிலான தமிழ் வழக்குவாதப் போட்டி-2024

## விதிமுறைகள்

1. **போட்டி நாட்கள்** :-**15.3.2024** (வெள்ளி) முதல் **17.03.2024** (ஞாயிறு வரை) நடைபெறும்

2. **நிகழ்விடம்**:- SMVEC - சட்டக் கல்வி வளாகம், மதகடிப்பட்டு, புதுச்சேரி

3. **அணியினர்களின் தகுதிகள்**

- ❖ சட்டக்கல்லூரிகளில்/பல்கலைக் கழகங்களில் தற்போது ஐந்தாண்டு அல்லது மூன்றாண்டு சட்டப்படிப்பில் பயின்றுவரும் மாணவர்கள் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள தகுதியானவர்கள்.
- ❖ ஒவ்வொரு கல்லூரி/பல்கலைக் கழகத்திற்கு ஒரு அணி மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
- ❖ ஒவ்வொரு அணிக்கும் இரண்டு வழக்காடுபவர்கள் மற்றும் ஒரு ஆராய்ச்சியாளர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

4. **பங்கேற்பாளர்களின் சீருடை**

(i) பங்கேற்பாளர்கள், மாணவ வழக்குரைஞருக்கான உரிய சீருடையில் மட்டுமே போட்டி நடைபெறும் மாதிரி நீதிமன்ற அறைக்குள் அனுமதிக்கப்படுபவர்.

(ii) **ஆண்கள்:-** கருப்பு நிற முழுக்கால் சட்டை, வெள்ளை நிற முழுக்கை சட்டையுடன் கருப்பு நிற பிளேஸர் மற்றும் கருப்பு நிற ஷூ அணிந்து வரவேண்டும். **(Black Pant, Full hand White shirt with Black blazer).**

(iii) **பெண்கள்:-_** கருப்பு நிற முழுக்கால் சட்டை, வெள்ளை நிற முழுக்கை சட்டையுடன் கருப்பு நிற பிளேஸர் மற்றும் கருப்பு நிற ஷூ அணிந்து வரவேண்டும் **(Black Pant, Full Hand White shirt with Black Blazer).**

(ii) **வழக்காடும் மொழி:-** இந்த வழக்குவாதப் போட்டிக்கு தமிழ்மொழி மட்டுமே வழக்காடும் மொழியாக அனுமதிக்கப்படும். பிறமொழி சொற்கள் பயன்படுத்தக்கூடாது.

(iii) **அணி பதிவு செய்யும் முறை:-**

- ❖ அணி பதிவுசெய்யும் முறையானது இரண்டு நிலைகளில் நடைபெறும். முதல் நிலையில் தற்காலிகப் பதிவும், இரண்டாம் நிலையில் இறுதி பதிவும் செய்தல் வேண்டும்.
- ❖ பங்கேற்க விரும்பும் அணி தங்களின் அடிப்படை விவரங்களைக் கொண்டு கீழே இணைக்கப்பட்டுள்ள கூகுள் படிவ இணைப்பின் மூலமாக தற்காலிகமாகப் பதிவு செய்துகொள்ளலாம்.
- ❖ கூகுள் படிவ இணைப்பு – https://docs.google.com/forms/d/e/1FAIpQLSeDu5Vf_EoCKizvv0VRvV6nfRgWzMToywG2iQE-I6XuiKZNNg/viewform?usp=pp_url
- ❖ முதல் நிலை தற்காலிக அணி பதிவிற்கான கடைசி நாள் **09.02.2024** தற்காலிகப் பதிவிற்கு எவ்விதமான கட்டணமும் இல்லை.
- ❖ தற்காலிகப் பதிவு செய்த அணிகளுக்கு , இறுதி பதிவிற்கான பிரத்யேக படிவம் கல்லூரியின் வழக்கு வாத ஒருங்கிணைப்புக் குழுவால் மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு, மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட படிவத்தை பூர்த்தி செய்து , இறுதிப் பதிவிற்கான பதிவுக்கட்டணம் ரூ.2,000/– செலுத்தியதற்கான ரசீதையும் இணைத்து **15.2.2024** அன்று மாலை **5.00** மணிக்குள் **smvecmootcourt24@smvec.ac.in** என்ற மின் அஞ்சலுக்கு அனுப்பி உறுதி செய்ய வேண்டும்

5. முறையாகப் பதிவு செய்யப்பட்ட அணிகள் ,இணைப்பு I-ல்.உள்ள படிவத்தை பூர்த்தி செய்து **15.3.2024** அன்று காலை **11.00** மணிக்கு வழக்குவாதப் போட்டி ஒருங்கிணைப்புக் குழுவிடம் நேரில் சமர்பித்து தங்களின் பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும்.

6 **பதிவுக் கட்டணம்:-**

பதிவு செய்யும் ஒவ்வொரு அணியும் பதிவுக் கட்டணம் ரூ.2,000/– இணையவழி கட்டணம் (G-pay) மூலம் பின்வரும் வங்கி கணக்கிற்கு அனுப்ப வேண்டும்.

| | | |
|---|---|---|
| Name of the College | :- | Sri Manakula Vinayagar Engineering College |
| Account Number | :- | 6207986448 |
| Bank Name | :- | Indian Bank |
| Branch | :- | Madagadipet |
| IFSC CODE | :- | IDIB000M203 |

ரூபாய் அனுப்பிய பின் அதற்க்கான சான்றாக Screen short –ஐ பின்வரும் எண்ணிற்கு 9944011269 - R.Vijayakumar உடனடியாக அனுப்ப வேண்டும். அல்லது வரைவு காசோலையாக (Crossed Account Payee) SRI MANAKULA VINAYAGAR ENGINEERING COLLEGE என்ற பெயருக்கு புதுச்சேரியில் உள்ள ஏதாவது ஒரு வங்கி கிளையில் மாற்றத்தக்கதாக எடுத்து அனுப்ப வேண்டும். பதிவுக் கட்டணம் செலுத்தாமல் அனுப்பப்படும் பதிவுப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பதிவுக்கட்டணம் எந்த காரணத்தாலும் (போட்டியாளர்கள் போட்டியில் பங்கேற்காமை போன்றவை) திருப்பித்தர இயலாது.

7. **எழுத்துப்பூர்வமான வாதுரைகள் கீழ்கண்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.**

- ❖ எழுத்துப்பூர்வமான வாதுரைகள் தமிழில் மட்டுமே இருக்க வேண்டும். தமிழ்ச் சொற்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
- ❖ ஒவ்வொரு அணியும் இருதரப்பினர்களுக்குமான எழுத்துப்பூர்வ வாதுரைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ எழுத்துப்பூர்வமான வாதுரையை சமர்ப்பித்த பிறகு அதில் திருத்தம் செய்யவோ, இணைப்புகள் சமர்ப்பிக்கவோ, கூடுதலாக எழுத்துப்பூர்வமான வாதுரை சமர்ப்பிக்கவோ வாதுரைகளை மேம்படுத்தவோ கண்டிப்பாக அனுமதிக்கப்படமாட்டாது.
- ❖ இருதரப்பினர்களுக்குமான எழுத்துப்பூர்வமான வாதுரைகளை தனித்தனியாக **3** பிரதிகள் சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ எழுத்துப்பூர்வமான வாதுரைகளை முறையாக தையலிடப்பட்ட (Sprial) புத்தக வடிவில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.

8. **எழுத்துப்பூர்வமான வாதுரைகளில் இடம் பெற வேண்டியவை.**

- ❖ பொருளடக்கம்
- ❖ தீர்ப்புகளின் பட்டியல்
- ❖ நீதிமன்ற ஆள்வரை
- ❖ வழக்கின் பொருண்மைகள் சுருக்கமாக
- ❖ எழுவினாக்கள்
- ❖ சுருக்க வாதுரை
- ❖ விரிவான வாதுரை
- ❖ இறஞ்சுதல்

மனுதாரரின் வாதுரையின் மேல் அட்டை மஞ்சள் நிறத்திலும், எதிர்மனுதாரரின் வாதுரையின் மேல்அட்டை சிகப்பு நிறத்திலும் இருத்தல் வேண்டும்.

9. <u>எழுத்துப்பூர்வமான வாதுரையின் வடிவம்.</u>

- ❖ வரிகளுக்கு இடையிலான இடைவெளி 1.5 வரி இடை வெளி.
- ❖ நான்கு பக்கமும் 1 அங்குலம் அளவு விளிம்பு இடைவெளி விட வேண்டும்.
- ❖ எழுத்து வடிவம் 12 அளவு
- ❖ அடிக்குறிப்புகள் 10 அளவு
- ❖ பக்க எண்கள் தாளின் கீழ்ப்பக்கத்தில் மையப் பகுதியில் இருத்தல் வேண்டும்.
- ❖ எழுத்துப்பூர்வமான வாதுரையில் இணைப்புகள், புகைப்படங்கள், வரைபடங்கள், சான்றிதழ்கள், வாக்குமூலங்கள், பிரமாண வாக்குமூலங்கள் போன்றவை எதுவும் இருக்கக் கூடாது.
- ❖ எழுத்துப்பூர்வமான வாதுரைகள் அனைத்தையும் உள்ளடக்கி மொத்தமாக 30 பக்கங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- ❖ எழுத்துப்பூர்வமான வாதுரையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அணியை அடையாளப்படுத்தும் வகையில் பங்கேற்பாளர்களின் பெயர்களோ, கல்லூரியின் பெயரோ வேறு எவ்வகையான அடையாளங்களோ இடம் பெறக்கூடாது.

எழுத்துப்பூர்வமான வாதுரைகள் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையில் **15.3.2024** காலை **11.00** மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

10. <u>எழுத்துப்பூர்வமான வாதுரைகளுக்கான மதிப்பெண்கள்:-</u>

எழுத்துப்பூர்வமான வாதுரைக்களுக்கான மொத்த மதிப்பெண்கள் 20. இந்த மதிப்பெண்கள் பின்வரும் காரணிகளின் அடிப்படையில் வழங்கப்படும்.

| வ.எண். | மதிப்பெண்களுக்கான காரணிகள் | அதிகபட்ச மதிப்பெண் |
|---|---|---|
| 1. | பொருண்மை குறித்த தெளிவு | 4 |
| 2. | சட்ட நுண்ணறிவு | 4 |
| 3. | சட்டம், பொருண்மைகளின் பகுப்பாய்வு | 4 |
| 4. | முன்தீர்ப்புகளை கையாளும் திறன் | 4 |
| 5. | இலக்கணம், மொழிநடை, சட்டத்தமிழ் ஆளுமை | 4 |

11. <u>போட்டிச் சுற்றுகள்</u>

- ❖ தகுதி சுற்றில் ஒவ்வொரு அணியும் இரண்டு கட்டமாக, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் சார்பில் வாதிட வேண்டும். இரண்டாம் கட்டமாக போட்டியின் இறுதியில் மொத்த மதிப்பெண் அடிப்படையில், முதல் 8 அணிகள் கால் இறுதிச் சுற்றிற்குத் தகுதி பெறுவார்கள்.
- ❖ கால் இறுதிச் சுற்றில் வெற்றிபெறும் 4 அணிகள் அரையிறுதிச் சுற்றிற்குத் தகுதி பெறுவார்கள்.
- ❖ அரையிறுதிச் சுற்றில் வெற்றி பெறும் இரண்டு அணிகள் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறுவார்கள்.
- ❖ அனைத்துச் சுற்றுக்களிலும், வாதிட வேண்டிய தரப்பு மற்றும் எதிர் அணி ஆகியவற்றை குலுக்கல் முறையில் போட்டி நாளன்று தேர்வு செய்யப்படும்.
- ❖ போட்டி நடைபெறும் அறைகளில் வாதிடும் அணிகளைத் தவிர வேறு அணிகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, பார்வையாளராகவோ இருக்க அனுமதியில்லை.
- ❖ அவ்வாறு ஏதேனும் ஒருங்கிணைப்புக் குழுவால் கண்டறியப்பபட்டால் சம்மந்தப்பட்ட அணி உடனடியாக தகுதி நீக்கம் செய்யப்படும். இதில் ஒருங்கிணைப்புக் குழுவின் முடிவே இறுதியானது.
- ❖ ஒவ்வொரு அணியும் வழக்காட 15 நிமிடங்களும், மறுத்தளிக்க 5 நிமிடங்களும், மறுத்தளித்தல் குறித்த விளக்கம் கொடுக்க 5 நிமிடங்களும் வழங்கப்படும்.

- ❖ கால் இறுதி மற்றும் அரை இறுதி சுற்றில் ஒவ்வொரு அணியும் வழக்காட 20 நிமிடங்களும், மறுத்தளிக்க 5 நிமிடங்களும், மறுத்தளித்தல் குறித்த விளக்கம் கொடுக்க 5 நிமிடங்களும் வழங்கப்படும்.

- ❖ இறுதிச் சுற்றில் ஒவ்வொரு அணியினரும் வழக்காட 30 நிமிடங்களும், மறுத்தளிக்க 5 நிமிடங்களும், மறுத்தளித்தல் குறித்த விளக்கம் கொடுக்க 5 நிமிடங்களும் வழங்கப்படும்.

- ❖ போட்டிக்கான மொத்த மதிப்பெண்கள் 100 (எழுத்துப்பூர்வமான வாதுரைகளுக்கு மதிப்பெண்கள் 20, வாய்மொழி வாதங்களுக்கு மதிப்பெண்கள் 80).

12<u>வாய்மொழி வாதங்களுக்கான மதிப்பெண்கள்.</u>

| வ.எண். | மதிப்பெண்களுக்கான காரணிகள் | அதிகபட்ச மதிப்பெண் |
|---|---|---|
| 1. | பொருண்மை, சட்டம் குறித்த தெளிவு | 15 |
| 2. | சட்டக்கோட்பாடுகளை எடுத்தாளும் திறன் | 15 |
| 3. | கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் திறன் | 15 |
| 4. | முன்தீர்ப்புகளை எடுத்தாளும் திறன் | 15 |
| 5. | நீதிமன்றத்தில் நடந்துகொள்ளும் முறை | 10 |
| 6. | இலக்கணம் மற்றும் மொழி நடை | 10 |

- ❖ போட்டியாளர்கள் வாதிடும்பொழுது அவர்களின் அடையாளத்தையோ, அவர்கள் சார்ந்த கல்லூரியின் அடையாளத்தையோ அறிந்து கொள்ளும் வகையில் எவ்விதமான அடையாளத்தையும், அடையாள அட்டைகளையும் நீதிமன்ற அறைக்குள் பயன்படுத்தக்கூடாது மீறும் பட்சத்தில் அந்த அணி உடனடியாகத் தகுதி நீக்கம் செய்யப்படும்.

- ❖ போட்டியாளர்கள் அதிகபட்ச அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவைகளைப் பின்பற்ற வேண்டும். மீறும் பட்சத்தில் அந்த அணி உடனடியாகத் தகுதி நீக்கம் செய்யப்படும்.

- ❖ வாதிடும் பொழுது அணியினர் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களால் அங்கீகரிக்கப்பட்ட தீர்ப்பு (தமிழ் / ஆங்கிலம்) திரட்டுகள் மற்றும் சட்டப் புத்தகங்களை (தமிழ் / ஆங்கிலம்) பயன்படுத்திக்கொள்ளலாம். வேண்டுமானால் அவற்றின் நகல்களையும் வழக்கு வாத நீதியரசர்களிடம் சமர்ப்பிக்கலாம்.

13.. <u>சிறந்த மாணவ மற்றும் மாணவி வழக்குரைஞர்கள்</u>

தகுதிச்சுற்றில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் சிறந்த மாணவ மற்றும் மாணவி வழக்குரைஞர்கள் தேர்வு செய்யப்படுவர்.

14 <u>அணிகளுக்கான தங்குமிடம் மற்றும் உணவு.</u>

- ❖ அணியில் பங்கேற்பவர்களுக்கு **15.3.2024 மதியம் 1.00 மணி முதல் 17.3.2024 மதியம் 12.00 மணிவரை** தங்குமிடம் வழங்கப்படும். எக்காரணம் கொண்டும் இதில் விதிவிலக்கு அளிக்கப்படமாட்டாது.

- ❖ அணியில் பங்கேற்பவர்களைத் தவிர மற்றவர்கள் யாரும் அணிகளுக்கான தங்குமிடத்தில் தங்க அனுமதியில்லை. மீறும் பட்சத்தில் அந்த அணி உடனடியாகத் தகுதி நீக்கம் செய்யப்படும்.

- ❖ அணியில் பங்கேற்பவர்கள் கல்லூரி நிர்வாகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள தங்குமிடங்களில் ஒழுங்கு கட்டுப்பாடு, தங்குமிட விதிகளுக்கு உட்பட்டு நடந்துகொள்ளவேண்டும். மீறும் பட்சத்தில் ஏற்படும் விளைவுகளுக்குச் சம்மந்தப்பட்ட அணி பங்கேற்பாளர்களே முழு பொறுப்பேற்க வேண்டும்.

- ❖ அணியில் பங்கேற்பவர்களுக்கு 15.3.2024 இரவு முதல் 17.03.2024 மதியம் வரை உணவு வழங்கப்படும்.

15 **<u>பரிசுகள்</u>**-

| | | | |
|---|---|---|---|
| 1. | முதல் பரிசு | : | ரூ.10,000/– |
| 2. | இரண்டாம் பரிசு | : | ரூ.7,500/– |
| 3. | சிறந்த எழுத்துப்பூர்வமான வாதுரை | : | ரூ.5,000/– |
| 4. | சிறந்த ஆண் மாணவ வழக்குரைஞர் | : | ரூ.5,000/– |
| 5. | சிறந்த பெண் மாணவ வழக்குரைஞர் | : | ரூ.5,000/– |

- ❖ பரிசு தொகைகளுடன் வெற்றிக் கோப்பைகளும் வழங்கப்படும்.
- ❖ பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் பரிசளிப்பு விழாவில் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்படும்.

## <u>ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் குழு</u>

| | | |
|---|---|---|
| 1. | முனைவர் வெ.பிரபா<br>இணை பேராசிரியர் | 93645 96999 |
| 2. | கோ.ஜெயலட்சுமி<br>உதவி பேராசிரியர் | 63741 84886 |
| 3. | வா. அபிநயா (எ) சிந்துஜா<br>உதவி பேராசிரியர் | 86107 54262 |
| 4. | ரா.விஜயகுமார்<br>உதவி பேராசிரியர் | 99440 11269 |

# <u>இணைப்பு –I</u>

## <u>பதிவுப் படிவம்</u>

**<u>கல்லூரி / பல்கலைக் கழகம் குறித்த விவரம்</u>**

1. கல்லூரி / பல்கலைக்கழகத்தின் பெயர் :
2. மின்னஞ்சல் முகவரி :
3. தொடர்புக்கான பேராசிரியர் பெயர் :
4. பேராசிரியர் கைபேசி எண். :

**<u>முதல் மாணவ வழக்குரைஞர் குறித்த விவரம்</u>**

1. பெயர் :
2. வகுப்பு :
3. மின்னஞ்சல் முகவரி :
4. கைபேசி எண் :
5. கையொப்பம் :

சமீபத்திய கலர் புகைப்படம்

**<u>இரண்டாம் மாணவ வழக்குரைஞர் குறித்த விவரம்</u>**

1. பெயர் :
2. வகுப்பு :
3. மின்னஞ்சல் முகவரி :
4. கைபேசி எண் :
5. கையொப்பம் :

சமீபத்திய கலர் புகைப்படம்

**<u>மாணவ ஆராய்ச்சியாளர் குறித்த விவரம்</u>**

1

பெயர்

2

வகுப்பு

3

வகுப்பு

4

மின்னஞ்சல் முகவரி

5

கைபேசி எண்

6

சமீபத்திய கலர் புகைப்படம்

**முதல்வர் / துணைவேந்தர்/ பதிவாளர் கையொப்பம்**
**கல்லூரி/பல்கலை கழக முத்திரையுடன்**

## முக்கிய நாட்கள்

## தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப் போட்டி

| | | | |
|---|---|---|---|
| 1. | வழக்குவாதப் போட்டியின் நிகழ்வுகள் வெளியிடுதல் & அனைத்து கல்லூரிகளுக்கும் அழைப்பு அனுப்புதல் | : | 29.01.2024 |
| 2. | முதல்நிலை பதிவு செய்ய இறுதிநாள் | : | 09.02.2024 |
| 3. | போட்டியாளர்கள் இறுதிப் பதிவு செய்ய கடைசி நாள் | : | 15.02.2024 |
| 4. | போட்டியாளர்கள் தங்கள் பங்கேற்பை நேரில் உறுதி செய்ய வேண்டிய நாள். | : | 15.03.2024 காலை 11 மணி |
| 5. | எழுத்து வடிவிலான வாதுரை சமர்ப்பிக்க கடைசி நாள் | : | 15.03.2024 காலை 11 மணி |
| 6. | துவக்க விழா | : | 15.03.2024 மாலை 4.30 மணி |
| 7. | தகுதிச் சுற்று | : | 16.03.2024 காலை 10 மணி முதல் |
| 8. | கால் இறுதிச் சுற்று | : | 16.03.2024 மாலை 5 மணி முதல் |
| 9. | அறை இறுதிச் சுற்று | : | 17.03.2024 காலை 10 மணி |
| 10. | இறுதிச் சுற்று | : | 17.03.2024 மதியம் 2 மணி |
| 11. | பரிசளிப்பு விழா | : | 17.03.2024 மாலை 5 மணி |